Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# The Virtues of Femininity Eulogized in Shakta Religion

**I. Karthick**, Reg No-21113154021023, Research Scholar of Tamil, S.T. Hindu College,
Nagercoil (Affiliated to Manonmaniam Sundaranar University), Tirunelveli – 627012, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-5257-9892**
**Dr. P. M. Jayakala,** Associate Professor of Tamil, S.T. Hindu College,
Nagercoil (Affiliated to Manonmaniam Sundaranar University), Tirunelveli – 627012, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**
**DOI: 10.5281/zenodo.14744609**

## Abstract

*Puranas say that there are six religions in the Hindu religion. They follow six sects namely Sauram, Ganapatyam, Saivam, Vaishnavam, Saktam and Kaumaram. Among these, Saktam leads Ambigai worship. Shakthars are the people who worship the mother who is the feminine form of Lord Shiva. These sects worship deities like Parvati, Meenakshi, Kamakshi, Abhirami, Kali etc. as various forms of Goddess Shakti. The trust of this sect is that femininity is the source of everything. Abirami Pattar is one of the very notable devotees of Goddess Abirami. His real name was Subramania Iyer and was born in Thirukkadavur. His period is said to be from the late eighteenth century to the early nineteenth century AD. He was completely involved in Shakta worship. He used to worship Goddess Abirami wholeheartedly. To test his devotion, the king asked him to make the full moon appear on the new moon day by the grace of the Goddess. He sang a bhakti song entitled "Abirami Anthathi" to call for the appearance of the Goddess to grace him with the boon. It happened by the grace of Abirami. This review article reveals the qualities of femininity as documented in the book "Abirami Anthadi".*

**Keywords:** Shakta Margam, *Abhirami Antadi*, Abirami Pattar, Abirami, Goddess.

## References

[1] Abirami Pattar, *Abirami Anthadi*. Kannadasan Publishing House, 12, Kannadasan Road, Thiagarajanagar, Chennai- 17, October 1997.
[2] Chelapandi, S. "Bharathiyin Aalumaiyil Penkal." *International Journal of Tamil Language and Literary Studies*, Volume-2, Sirappithazh-3, February 2020.
[3] Padmadevan. *Bharathiyar Padaippukal*. Kaleshvari Patippagam, Chennai 17, April 2013.
[4] Pulioorkesigan. *Kalingathuparani*. Sree Bharathi Publications, West Mambalam, Chennai -33. First edition, January. 2024.
[5] Lena Kumar. *Thirukural (Moolamum Uraium).* Yathumagi Publication, Palayamkottai, Thirunelveli – 627 002, First Edition 2003.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# சாக்த மார்க்கம் போற்றும் பெண்மையின் சிறப்பு

**ஐ. கார்த்திக்**, பதிவு எண்: 21113154021023, முனைவர்பட்டஆய்வாளர், தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில் (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது), தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-5257-9892
**முனைவர் பா. ம. ஜெயகலா**, இணைப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம், தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில் (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது), தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
DOI: 10.5281/zenodo.14744609

**ஆய்வுச் சுருக்கம்**

*சமயங்கள் ஆறு என்று புராணங்கள் கூறுகின்றன. சௌரம், கணாபத்யம், சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம் என்ற ஆறு மார்க்கங்களை இறைவழிபாட்டில் பின்பற்றுகின்றனர். இவற்றுள் சாக்தம் என்பது அம்பிகை வழிபாட்டை முன்னெடுக்கின்றது. சிவபெருமானின் சக்தி வடிவாகத் திகழ்கின்ற அன்னையை வழிபடும் பிரிவினரை சாக்தர்கள் என்கிறோம். சக்தி தேவியின் பல வடிவங்களான பார்வதி, மீனாட்சி, காமாட்சி, அபிராமி, காளி முதலியபெண் தெய்வங்களை இப்பிரிவினர் வழிபடுகின்றனர். பெண்மையே அனைத்திற்கும் ஆதாரம் என்பது இப் பிரிவினரின் நிலைப்பாடு. இத்தகு தன்மையில் இறைவியை வழிபட்ட அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி என்னும் நூல் எடுத்துக் கூறுகின்ற பெண்மையின் சிறப்புகளை வெளிப்படுத்தும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** சாக்த மார்க்கம், அபிராமி அந்தாதி, அபிராமி பட்டர், அபிராமி, அம்மன்.

**முன்னுரை**

பெண்மையைத் தாயாகவும், தெய்வமாகவும் போற்றுவது சாக்த சமயமாகும். பெண் தெய்வங்களை வழிபடும் நோக்கிலும், புகழ்ந்து பாடும் நோக்கிலும் பல்வேறு தமிழ் இலக்கியங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் அபிராமி அந்தாதி என்னும் நூல் பெரும் சிறப்பிற்கு உரித்தானது. திருக்கடவூரில் கோயில் கொண்டிருக்கும் அபிராமி என்னும் இறைவியை நோக்கி அபிராமி பட்டர் பாடிய பாடல்களின் தொகுப்பே அபிராமி அந்தாதி என்னும் நூலாகும். இவ்விலக்கியம் அபிராமியின் சிறப்புகளை மட்டுமின்றி பெண்மையின் சிறப்புகளையும் வெளிப்படுத்துகின்றது. இவற்றை ஆராயும் நோக்கில் இவ்வாய்வு கட்டுரை நகர்கின்றது.

**அபிராமி அந்தாதி**

மயிலாடுதுறைக்கு அருகேயுள்ள திருக்கடையூர் என்னும் தலம் சிவ பெருமானின் வீரட்டானத் தலங்களில் ஒன்றாக விளங்குகின்றது. மார்கண்டேயனுக்காக காலனை

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

சிவபெருமான் வென்ற சிறப்பினை உடையது இத்தலம். இங்கு எழுந்தருளியுள்ள அம்பிகை அபிராமி. இந்த அம்பிகையை போற்றும் வகையில் பாடப்பட்டது அபிராமி அந்தாதி ஆகும்.

**அபிராமி பட்டர்**

சுப்ரமணிய ஐயர் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் திருக்கடவூரில் பிறந்தவர். இவரது காலகட்டம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை என்று குறிப்பிடப்படுகின்றது. இவர் சாக்த வழிபாட்டில் முழுமையான ஈடுபாடு உடையவர். அபிராமி அன்னையை மனதார வணங்கி வந்தவர். இவரது பக்தியை மன்னன் சோதிக்க அமாவாசை திதியில் பௌர்ணமி நிலவினை அன்னையின் அருளால் தோன்ற செய்தவர்.

**தாயின் வடிவம்**

அபிராமியை அன்னையின் வடிவமாகத் துதித்து வாழ்க்கைக்கு உற்ற துணையாகவும், தொழுகின்ற தெய்வமாகவும், பெற்ற தாயாகவும், வேதங்களின் வடிவாகவும் திகழ்பவள் அன்னை அபிராமி. இத்தகு அன்னை மலரம்பும், கரும்பு வில்லும், மெல்லிய பாசமும், அங்குசமும் கொண்டு விளங்குகின்றாள் என போற்றுகிறார். இதனை,

**துணையும், தொழுந் தெய்வ மும்பெற்ற**
**தாயும், சுருதிகளின்**
**பணையும், கொழுந்தும், பதிகொண்ட**
**வேரும் – பனிமலர்ப்பூங்**
**கணையும் கருப்புச் சிலையுமென்**
**பாசாங்குசமும்கையில்**
**அணையும் திரிபுர சுந்தரி**
**யாவது அறிந்தனமே! (அபிராமி அந்தாதி 2)**

என்ற பாடல் விளக்குகின்றது. பிறவாவரத்தை வேண்டி பாடுகின்ற அபிராமி பட்டர் கனி, பெண்யானை, பொற்கொம்பு, பொன் கடம்பு என்று புகழ்வதோடு தாய்மையைப் போற்றும் வகையில் தேவர்களை எல்லாம் பெற்ற அன்னையே என்று அழைக்கின்றார். இதனை,

**படியே மறையின் பரிமள**
**மேபனி மால் இமயப்**
**பிடியே பிரமன் முதலாய**
**தேவரைப் பெற்ற அம்மே (அபிராமி அந்தாதி 22 : 3-6 )**

என்ற வரிகள் விளக்குகின்றன.

உலக இயக்கமான ஆக்குதல், காத்தல், அளித்தல், அருளல் என்னும் தொழில்களைப் புரிகின்ற தேவர்களையெல்லாம் படைத்தவள் காளி தேவி சிவன், பிரம்மா, விஷ்ணு, முருகன் விநாயகர் என்னும் தேவர்களை எல்லாம் படைத்து உலகை இயக்குபவள் காளி தேவி. இதனை,

**கலைவளர் உத்தமனைக், கரு முகில் ஒப்பவனைக்,**
**கரட தடக் கடவுள் கனக நிறுத்தவனைச்,**
**சிலை வளைவுற்று அவுணத் தொகை செகவிட்ட பரித்**
**திறலவனைத் தரும் அத் திரு உதரத்தினளே. (கலிங்கத்து., 126)**

என்ற பாடல் நமக்கு கூறுகின்றது.

**ஆக்கம் அழிவு**

சமயங்கள் பதினான்கு உலகங்களைக் குறிப்பிடுகின்றன. இப்பதினான்கு உலகங்களையும் படைத்தவளும், காப்பவளும், அழிப்பவளும் அபிராமி அன்னை என்று அபிராமி அந்தாதி சிறப்பிக்கின்றது. இதனை,

**பூத்தவ ளேபுவ னம்பதி**
**னான்கையும்பூத்த வண்ணம்**
**காத்தவளேபின் கரந்தவ**
**ளேகறைக் கண்டனுக்கு... (அபிராமி அந்தாதி 13 : 1-4 )**

என்ற வரிகள் நவில்கின்றன. பாரதியார் சக்தி தேவியைத் தன்னுடைய தோத்திரப் பாடல்களில் பல்வேறு வகையாக சிறப்பித்துப் பாடியுள்ளார். அவ்வாறான பாடல் ஒன்றில் மகாசக்தியே ஆக்கமும், அழிவும் தரும் தெய்வமென்று குறிப்பிட்டுள்ளார். இதனை,

**வைய முழுவதும் படைத்தளிக்கின்ற**
**மகா சக்தி தன்புகழ் வாழ்த்துகின்றோம் (பாரதியார் கவிதைகள் பக். 174)**

என்ற வரிகள் இயம்புகின்றன. பெண்மையை படைக்கும் சக்தியாகவும், அழிக்கும் சக்தியாகவும் போற்றியுள்ள தன்மை இங்கு வெளிப்படுகின்றது.

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின் (குறள். 54)**

மன உறுதியுள்ள பெண்ணைக் காட்டிலும் பெருமை தரக்கூடிய பொருள் இவ்வுலகத்தில் வேறுஒன்றுமில்லை என்கிறார்வள்ளுவர். மேலும் குடும்பம், கற்பு இரண்டும் பெண்ணிற்குத் தேவை என்றும் வலியுறுத்துகின்றார்.

**உலகினுக்கு ஒளியானவள்**

அபிராமி அன்னையானவள் நவரத்தினமணிகளில் சிறந்த மணியாகவும், அந்த மணிகளிலிருந்து வெளிப்படுகின்ற பேரொளியாகவும், ஒளிர்கின்ற அணிகலன்களை அணிந்தவளாகவும் திகழ்கின்றாள். மேலும், அந்த அணிகளுக்கு அழகு சேர்ப்பவளாகவும் திகழ்கின்றாள் என்று அபிராமி அன்னையை அபிராமி பட்டர் புகழ்ந்துள்ளார். இதனை,

**மணியே மணியின் ஒளியே**
**ஒளிரும் மணிபுனைந்த**
**அணியே அணியும் அணிக்கழகே... (அபிராமி அந்தாதி 24: 1-3)**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. தேசியத்தையும் தெய்வீகத்தையும் போற்றிய பாரதியார் தம்முடைய பாடல்களில் பெருமளவில் சக்தி வழிபாட்டையே பின்பற்றியுள்ளார்."பாரதியாரின் பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் இன்றளவும் முக்கியமானதாக விளங்குகின்றன." என்கிறார் செ. செல்லப்பாண்டி. மூர்த்திகள் மூன்று பேர் உண்டு. மும்மூர்த்திகளின் மூலப்பொருள் ஒளிரும் மலை ஆகும். அந்த ஒளியை எப்பொழுதும் சக்தி எனப் போற்ற வேண்டும் என்று தோத்திரப் பாடலில் பாடியுள்ளார். இதனை,

**மூர்த்திகள் மூன்று பொருளொன்று -அந்த**
**மூலப் பொருள்ஒளியின் குன்று ;**
**நேர்த்தி திகழுமந்த வொளியை - எந்த**
**நேரமும் போற்றுசக்தி யென்று. (தோத்திரப் பாடல்கள். பக்: 176)**

என்ற வரிகள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

**அனைத்தும் அவளே**

அபிராமி நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்று பஞ்சபூதங்களாகவும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற தன்மைகளாகவும் இருக்கக்கூடியவள். அத்தகுஅபிராமி அன்னையின் பாதத்தைப் பிடித்தவர்கள் எல்லாவிதமான செல்வங்களையும் பெற்று வாழ்வார் என்று அபிராமி அன்னையை பாடியுள்ளார். இதனை,

**பாரும் பாரும், புனலும், கனலும், வெங்**
**காலும், படர் விசும்பும்,**
**ஊரும் முருகு சுவையொளி**
**ஊறொலி ஒன்றுபடச்**
**சேரும் தலைவி சிவகாம**
**சுந்தரி சீரடிக்கேசாரும் தவமுடையார்படை**
**யாத தனமில்லையே. (அபிராமி அந்தாதி 68)**

என்ற பாடல் வழி நாம் உணர முடிகின்றது.பெண் சக்தியை காளியின் வடிவமாக வழிபட்ட பாரதியார் காளி தேவியை உலக உயிர்கள் அனைத்திற்கும் ஆதாரமாகவும் வாழ்க்கையின் துணையாகவும் நின்றதாகப் பாடியுள்ளார். மேலும், காளித்துதி என்னும் பாடலில் உலகில் அனைத்து பொருள்களாகி எங்கும் நிறைந்தவள் காளியென்று பாடியுள்ளார். இதனை,

**யாதுமாகி நின்றாய்- காளீ !**
**எங்கும் நீ நிறைந்தாய்**
**தீது நன்மை யெல்லாம்- காளி**
**தெய்வ லீலை யன்றோ ?**
**பூத மைந்து மானாய் - காளி**
**பொறிகளைந்து மானாய்**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**போத மாகி நின்றாய்-காளி**

**பொறியை விஞ்சி நின்றாய்... (அபிராமி அந்தாதி 68)**

என்ற பாடல் பகர்கின்றது.

**முடிவுரை**

சாக்த வழிபாட்டினை மேற்கொண்ட அபிராமி பட்டரும், பாரதியாரும் பெண் சக்தியினை தெய்வமாகவும், அன்னையாகவும், உலகில் எல்லா பொருட்களையும் ஆக்கும் அழிக்கும் பேராற்றலாகவும் பாடியுள்ளமை புலப்படுகின்றது. மேலும், பெண்மையே பெரும் சக்தி. அதுவே உலகின் ஆற்றல். கருணையும், அன்பும் கொண்டு விளங்கும் பெண்மை எத்தகு சிறப்பு வாய்ந்தது என்பது இக்கட்டுரை வழி வெளிப்படுகின்றது.

**குறிப்புகள்**

[1] அபிராமிபட்டர். *அபிராமி அந்தாதி*. கண்ணதாசன் பதிப்பகம்-12, கண்ணதாசன் சாலை, தியாகராஜநகர், சென்னை- 17. பத்தாம் பதிப்பு, அக்டோபர் 1997.

[2] செல்லப்பாண்டி, செ. "பாரதியின் ஆளுமையில் பெண்கள்." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி-2, சிறப்பிதழ்-3, பிப்ரவரி 2020.

[3] பத்மதேவன். *பாரதியார் படைப்புகள்*. காளீஸ்வரி பதிப்பகம், சென்னை 17. ஏப்ரல் 2013.

[4] புலியூர்கேசிகன். *கலிங்கத்துப்பரணி*. ஸ்ரீ பாரதி பப்ளிகேஷன், மேற்கு மாம்பலம், சென்னை 33. முதல் பதிப்பு ஜனவரி 2024.

[5] லெனாகுமார். *திருக்குறள்* (மூலமும்உரையும்). யாதுமாகி பதிப்பகம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, 627 002. முதல் பதிப்பு 2003.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.